**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# விளிம்பு நிலையும் வர்க்க முரணும்

**க. கிருஷ்ணமூர்த்தி**
உதவிப் பேராசிரியர்
தருமமூர்த்தி இராவ் பகதூர்
கலவல கண்ணன் செட்டி
இந்துக்கல்லூரி, பட்டாபிராம் சென்னை-72

## முன்னுரை

தொடக்கக் கால நிலையில் காட்டு மிராண்டியாக வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் இயற்கைக்கு அச்சப்பட்டிருந்தான். இயற்கையாகவே கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களையும், வேட்டையிலிருந்து கிடைத்த உணவுகளையும் உண்டு வாழ்ந்து வந்தான். அப்போது கிடைத்த அனைத்தையும் பொதுநிலையில் வைத்துப் பகிர்ந்துண்டனர். கால ஓட்டத்தில் இயற்கையை தன் ஆற்றலுக்குக் கட்டுப்படுத்த முயன்றபோது அவன் வளர்ச்சிப் பெறத் தொடங்கினான். இந்நிலையில் தனியுடைமை வளர்ச்சிப் பெற்று மனித சமுதாயத்தில் வர்க்கங்கள் தோன்றின. தொடர்ச்சியாக நாகரிகங்கள் என்ற காலகட்டம் பரிணமித்தது. இந்நாகரிகம் வளர்ச்சிப் பெற்ற காலத்தில் பல்வேறு இனக்குழுக்களுக்குள் அதிகாரமிக்கவர்கள், ஆதிக்கமுடையவர்கள், சுரண்டலுக்கு ஆளானவர்கள் என்ற பிரிவுகள் ஏற்பட்டன. இயற்கையும் மனிதர்களை மேலாதிக்கம் செய்ய முயன்றதன் விளைவாக மனித நாகரிகம் உருவானது. சூழலின்மீது ஆளுகை செலுத்துவதுடன் தனது உடலையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபோது தனிஉடைமை தோன்றியது. இதனால் போர், வேளாண்மை, வணிகம், தொழில், கல்வி போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டவர்கள் பிறரின் உடலுழைப்பைச் சுரண்டியதுடன் எவ்வாறு அவர்கள் விளிப்புநிலை வர்க்கமாக்கப்பட்டனர் என்பதை அறியும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## விளிம்புநிலை பொருள் விளக்கம்

அதிகாரம் கொண்ட குழுக்களின் கருத்தாக்கங்கள் மையத்தில் அமைந்து பிற கருத்தாக்கங்களை மௌனமாக்குகின்றன. மையத்தில் இயங்கும் ஆதிக்கக் குழுக்களின் அடையாளங்களே ஒட்டுமொத்த மக்களுக்கான அடையாளமாகவும் ஒற்றைப் பெரு அடையாளமாகவும் கட்டமைக்கப்படுவதாக விளிம்பு நிலை மக்கள் குறித்த சிந்தனைகளும் பின் நவீனத்துவச் சிந்தனைப் போக்குகளும் அறிவிக்கின்றன. விளிம்பு நிலை என்ற சொல் இலக்கிய வட்டத்தில் பெரும்பான்மையாகப் பேசப்படுகின்ற ஒரு சொல்லாகும். இச்சொல்லை மையம், ஓரம் என இரு வகைப்படுத்தலாம். சாதி, சமய பொருளாதார, தொழில் ரீதியாக முன்னேறியவர்கள் மேல்தட்டு என்றும் அதன் கீழ் உள்ளவர்கள் கீழ்த்தட்டு எனவும் பொருள் கொள்ளலாம்.மேலும் 'Subalterm' என்பதற்கு விளிம்புநிலை மக்கள், ஓரப்பகுதி மக்கள் என்று பொருள் கூறப்படுகிறது. குறிப்பாக இனம், வர்க்கம் பண்பாட்டுப் பால் (Gender) சாதி (Caste) இனக்குழு (Tribe) ஆகிய பிரிவுகளில் தள்ளப்பட்ட மக்கள் திரள்களை இச்சொல்லால் குறிப்பது வழக்கம். வேறுவிதத்தில் கூறுவதென்றால், இதுவரை புனைந்துரைக்கப்பட்ட மேலாதிக்கப் பிரிவினரின் வரலாறுகளால் பொருட் படுத்தப்படாத அல்லது புறக்கணிக்கப்பட்ட மக்கள் திரள்களைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. (ராஜ்கௌதமன் 2021:131).

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*

*செய்தொழில் வேற்றுமை யான்* என்ற குறளை நோக்கும்போது விளிம்பு நிலையிலிருந்த மக்களுக்காகவே எழுதப் பட்டிருக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது.

### வர்க்கமுரண்

உழைக்கும் மக்களான விளிம்பு நிலை மக்களைப் பற்றிய புரிதல் பெரும்பான்மை ஆதிக்க வர்க்கம் கண்டு கொள்ளவில்லை. இவர்களுக்கிடையே ஒரு வர்க்க முரண் கட்டமைக்கப்பட்டு உழைப்பைத் தவிர வேறெதிலும் கவனம் செலுத்தவிடாமல் அவர்களைச் சுரண்டலுக்கு உட்பட்ட வாழ்க்கையினராகவே பார்த்துள்ளனர். நிலச் சாகுபடி என்னும் அடிப்படையிலேயே பொருளாதாரம் வளர்ந்தது. நிலத்தின் வளம் செம்மையாக இருந்ததோடு அங்கிருந்த உழவர்கள் மெய் வருத்தம் பாராத தொழிலா ளியாகவே இருந்தனர். செல்வ வளங்கள் சமச்சீரற்ற தன்மையில் பகிர்ந்தளிக்கப் பட்டதை மன்னர் காலத்திலிருந்தும் இலக்கியசான்றுகளின் வழிநின்றும் காலனிய ஆதிக்கத்திற்குப் பின்பும் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது உபரியைப் பிழிந்தெடுக்கப் படும் முறைமை மிகவும் சுரண்டல் தன்மை கொண்டதாக உள்ளது.சமுதாயத்தின் ஒரு பிரிவினர் மற்ற அனைவரின் உழைப்பின் பயனை அனுபவிக்கின்றனர். அத்தகைய உழைப்பைப் பிழிந்தெடுக்கும் முறைகள் சிக்கலாக உள்ளது. இந்தச் சமூக அமைப்பு முறை அடக்கு முறையைத் தொடரவும் தண்டனை விதிக்கக் கூடிய முறைமைகளை யும் தன்னுள் கொண்டுள்ளது. இந்நிலைக்கு ஆளாக்கப்படும் உழைக்கும் வர்க்கத்தினை மேட்டிமையினர் அவர்களைப் பொருளாதார முன்னேற்றத்திலும், சமூக முன்னேற்றத்திலும் வளரவிடாமல் பார்த்துக்கொண்டனர்.

### வர்க்கப் பேதம்

மிகத் தொன்மையான காலத்தில் வர்க்க வேறுபாடுகள் தோன்றி அடிமைகளும் சொத்துரிமை பெற்றவர்களும் என்ற இரு வேறு பிரிவுகள் தோன்றுவதற்கு முன்னர்த் தனித் தனிப் பிரிவுகள் ஏற்படவில்லை. உழைக்கும் மக்கள் அனைவருக்கும் உரியதாகவே அனைத்தும் இருந்து வந்துள்ளது. "சங்க காலத்திற்கு முன்பும் சங்க காலத்திலும் மனிதனால் உருவாக்கப்பட்ட சாதி, சமயம், கடவுள் கோட்பாடுகள் போன்றவற்றால் வர்க்கப்பேத முரண்பாடு களும் ஏற்றத் தாழ்வுகளும் நிலவின. சங்க காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், எனும் வகுப்புப் பிரிவுகள் காணப்படுகின்றன. துடியன், பாணன், பறையன், கடம்பன் எனும் குடிப் பெயர்களும், குன்றவர், பரதவர், ஆயவர், மறவர், உழவர் முதலிய ஐவகை நிலத்து மக்களின் பெயர்களும் காணப்படுகின்றன. பண்டைய இலக்கியங்கள் குறிப்பிடும் ஐவகை நிலப் பாகுபாட்டில் மருத நிலத்தில் தான் பிற நிலங்களைவிடச் சமூக மாற்றம் முதன் முறையாக நிகழ்ந்தது. இந்நில அமைப்பு முறை எல்லாச் சமூக உறவுகளின் வளர்ச்சியையும் நிர்ணயிக்க கூடிய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியாகக் கருதப்படுகிறது. இங்கு வாழ்ந்த மக்கள் உழவுத் தொழிலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அம்மக்கள் ஊரன், மகிழ்நன், கிழவன், மனைவி, கிழத்தி, உழவன், உழத்தியர், கடையர், கடைசியர், களமர், தொழுவர் எனப்பட்டனர்.இவர்களில் ஊரன், மகிழ்நன், கிழவன், மனைவி, கிழத்தியர் என்போர் மேன்மக்கள் எனப்பட்டனர். இவர்கள் அடிமை எஜமானர்களும் ஆண்டைகளும் ஆவர்.

கிழவன் என்ற சொல்லுக்கு உரிமை நிலத்துக்கும் அடிமைகளுக்கும் உரிமை என்பதே பொருள் ஆகும். உழவர், உழத்தியர், கடையர், கடைசியர், களமர், தொழுவர் என்போர் கீழ்மக்கள் எனப்பட்டனர். தொல்காப்பியம் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவினர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களுள் அந்தணர், அரசர் இவ்விருவரை உயர்ந்தோர் எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

*"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன"*

(தொல். அகத். 26)

இந்நூற்பா வழி ஓதல், தூது இந்த இருவகைப் பிரிவும் உயர்ந்தோர்களான அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியது என்று சுட்டி அவர்களை உயர்குடியினராகத் தொல்காப்பியம் சுட்டுகிறது. நால்வகை பிரிவினரோடு உழவர், இடையர், மக்களைச் சுட்டி வேறு எந்தச் சமூக பிரிவினர்களையும் சுட்டவில்லை. அதுமட்டுமல்லாமல்,

மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க்கும் ஆகிய காலம் உண்டே

(தொல்.பொருள். கற்.3)

என்று இழிந்தோரை மரபியல் குறிப்பிடுகிறது. இது தொல்காப்பியர் காலச் சமூகத்திலேயே விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட சமூகத்தினர் கீழோராகக் கருதப்படுவது மட்டுமல்லாமல் இழிந்தோர்களாகவும் சுட்டுவதை அறிய முடிகிறது.

சங்க கால வேளாண்மக்களாகிய உழைப் பாளிகள் வயல்களில் தங்கள் உழைப்பைச் செலுத்தி உற்பத்தி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்களை உழுதுண்போர், உழுவித்துண்போர் என்று பார்க்கிற போது நிலமுள்ள ஆண்டைகளுக்கு உழைப்பின் வேர்வையைச் சிந்தியவர்கள் விளிம்பு நிலை மக்களே ஆவர்.

மேட்டிமை குழுவிற்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும் சமுதாயத்தின் அனைத்து வளங்களில் உரிய பங்கு பெற முடியாதவர்களாகவும் குறைந்த அளவு உடையும், கல்வியும் பெற்று வரும் மக்களே விளிம்பு நிலையினர் ஆவர். இவர்கள் தான் சார்ந்த சாதி, செய்யும் தொழில், அரசியல், ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதார நிலை போன்றவற்றில் ஏதேனும் ஒரு விதத்தில் எல்லா நிலைகளிலும் முன்னேற்றம் இல்லாமல் இருப்பவர்களை விளிம்பு நிலையினராகக் கருதலாம். நிலத்தில் உண்மையாகவே உழைத்துப் பயிர் செய்யும் உழவனது நிலைமையோ மோசமாக இருந்துள்ளது. வரகரிசிச் சோற்றைப் புழுங்கிய அவரையோடு கலந்து அச்சோற்றை உண்டனர். இதை,

**“குறுந்தாள் வரகின் குறளவிழச் சொன்றி**

**அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்று**

**இன்சுவை மூரல்”** *(பெரும்பாண்: 192-194)*

எனக் கூறுகிறது. ‘இந்த உழவர்கள் நிலமற்றவர்கள் வேளாளர்கள் அல்லர்’ என்று பத்துப்பாட்டும் பண்டைத் தமிழர் வாழ்வும் என்ற நூலில் சாமி சிதம்பரனார் கூறியுள்ளது நோக்கத்தக்கதாகும். சொந்த நிலமுள்ளவர்கள் வீடுகளுக்குச் சென்றால் அங்கு என்ன கிடைக்கும் என்பதை

**தண்டலை உழவர் தனிமனைச் சேர்ப்பின்**

**தாழ் கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்**

**குலை முதிர் வாழை கூளி வெண் பழம்**

**திரள் அறைப் பெண்ணை நுங்கொடு பிறவும்** *(பெரும்பாண்: 355-360)*

இவ்வடிகள் மூலமாகச் சமுதாயத்தின் நிலமுள்ளவர்களின் உணவும், நிலமற்ற உழைப்பில் சோர்வு காட்டாத உழவர்களின் உணவு நிலைமையும், வேறுபாடான வர்க்க முரணையும் அறிய முடிகிறது. வர்க்க வேறுபாடுகள் பெருத்துவிட்ட அக்காலத்தில் அந்தந்த வர்க்க நிலைகளுக்கேற்ப அவரவர் கள் வாழ்க்கை முறைகள் காணப்பட்டன. சமூகத்தில் நிலவுகின்ற சமத்துவமற்ற நிலையானது நீண்ட வரலாற்றைக் கொண்டது. இதற்குக் காரணம் சாதி படிநிலை சமூகத்துடன் இணைந்துள்ளது தான். சாதி படிநிலைக்கு ஏற்ப செல்வ வளங்கள் வேறுபடுகின்றன. சாதியின் சூழ்நிலைக்கு ஏற்ப செல்வ வளங்கள் மீதான உரிமை அதிகமாகவும் உள்ளது. இது நாடு தழுவிய அளவில் நிலவுகின்ற ஒரு பொதுவான போக்காகவும் உள்ளது.

## முடிவுரை

சமுதாயத்தில் பல்வேறு தொழில்களை மேற்கொண்டிருந்த மக்களில் ஏராளமான சமுதாய நிலைகள், குழுக்கள் கூட்டங்கள் இருந்தன. இவை ஒவ்வொன்றும் தனித்தனிப் பெயர்களையுடைய வெவ்வேறு பண்பாட்டு மரபுகளாகத் தோன்றின. இப்பண்பாட்டு மரபுகள் அனைத்தும் தொழிலின் அடிப்படையில் அமையவில்லை என்றாலும் உழைப்புச் சுரண்டலுக்கு ஆளானவர்கள் நிலமற்ற ஒய்வறியா உழைப்பாளர்களே யாவர், இவர்களை வர்ண பாகுபாட்டில் உள்ளடக்கி வெவ்வேறு பெயர் குறியீட்டுடன் வழங்கி வந்தாலும் நிலம், அதிகாரம் முழுச் சுதந்திரம் இன்றி அன்று முதல் இன்றுவரை ஏதோ ஒரு விதத்தில் யாதுமற்றவர்களான விளிம்பு நிலை மக்களே ஆவர். இவர்களுக்கு அரசியல் அதிகாரப் பகிர்வும் நிலம், கல்வி, சம உரிமைப் பெற்று முழுமையடைய வேண்டும். இவையே வர்க்க முரணற்ற சமுதாயம் அமைய வழி வகுக்கும்.

## பார்வை நூல்கள்


1. கேசவன்.கோ. 2001, மண்ணும் மனித உறவுகளும, சரவண பாலு பதிப்பகம், விழுப்புரம்.
2. சிவசுப்பிரமணியன். ஆ, அடித்தள மக்கள் வரலாறு, NCBH சென்னை.
3. சுப்பிரமணியன்.ந, சங்க கால வாழ்வியல், NCBH சென்னை.
4. பழனிவேலு.கே. 2018,தொல்காப்பியத் திணைக் கோட்பாடு திறனாய்வியல் நோக்கு, பரிசல் புத்தக நிலையம், சென்னை.
5. பெருமாள் சாமி. வெ, சங்ககாலத் தமிழகத்தின் சமூகநிலை, பாரதி புத்தகாலயம், சென்னை.